பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

வடமேல் மாகாண பொது சேவை ஆணைக்குழு

வடமேல் மாகாண சபை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு
ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் காணப்படும் 239 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைகளைக் கொண்ட, வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2026 திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (Online) ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

குறிப்பு :

இப் பரீட்சையானது இணைந்த சேவைகளின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையுடன் இணைந்ததாக ஒரே பரீட்சையாக நடாத்தப்படுவதுடன், இரு சேவைகளுக்கும் தகுதி பெறும் விண்ணப்பதாரர்களுக்குத் தமது விருப்பத்திற்கு அமைவாக ஏதேனும் ஒரு சேவையினைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.

குறிப்பு – இணையவழி ஊடாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் செயல்முறை 2026 நவெம்பர் 02 ஆம் திகதி பி.ப. 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026 நவெம்பர் 15 ஆம் திகதி பி.ப. 9.00 மணியுடன் முடிவடையும்.

02. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக திறமை அடிப்படையில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள், அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 15/90 இன் படி வடமேல் மாகாணத்திற்குரிய மாவட்ட மக்கள் தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் வடமேல் மாகாண சபை அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III பதவிகளுக்காக நியமிக்கப்படுவதற்கு தெரிவு செய்யப்படுவர்.

03. நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பன வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். இப்பரீட்சையை நடாத்துதல், இரத்து செய்தல், ஒத்திவைத்தல் அல்லது ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் அல்லது இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

நியமனத்திற்காக தெரிவு செய்யப்படின், சேவையின் தேவைப்பாட்டிற்கு அமைவாக வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் ஒரு சேவைப் பணிமனையில் கடமையாற்றுவதற்கு நியமனம் பெறுபவர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

04. **சம்பள அளவுத்திட்டம் :-**

இலக்கம் 10/2025 மற்றும் 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக, அரச முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III, II மற்றும் I இற்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 48,470 - 10 x 540, 11 x 630 - 10 x 1,010 - 10 x 1,190 - ரூபா 82,800.00 ஆகும். மேற்படி சுற்றறிக்கையின்படி சம்பளம் வழங்கப்படும். (ரூபா. 53,870 இற்கு அப்பால் செல்வதற்கு தரம் II இற்குரிய பதவியுயர்வையும், ரூபா. 60,800 இற்கு அப்பால் செல்வதற்கு தரம் I இற்குரிய பதவியுயர்வையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.)

05. இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியது. மேலும், நீங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

5.1 இந்த நியமனம் மூன்று வருட காலப்பகுதியைக் கொண்ட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். வடமேல் மாகாண சபை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 03 வருடங்களுக்குள் சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

5.2 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு ஒத்திசைவான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக, சேவையில் இணைந்து 03 வருடங்களுக்குள் சேவையில் இணைந்த மொழிமூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச கருமமொழி / மொழிகள் பற்றிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

06. **தகைமைகள்** :- வடமேல் மாகாண சபை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் தகைமைகள் ஏற்புடையதாகும்.

6.1 விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தினுள் குறைந்தது மூன்று (03) வருடங்கள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

6.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பதினெட்டு (18) வயதிற்கு குறையாதவராகவும் முப்பது (30) வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6.3 நன்நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பின்வரும் கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ தமிழ் அல்லது ஆங்கில மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் (பொதுச் சாதாரண பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் நீங்கலாக) சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத்திட்டத்தின் கீழ் ஒரே அமர்வில் 03 பாடங்களில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்.

குறிப்பு :

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டிய மொழியாகக் கருதப்படுவது, விண்ணப்பதாரர் இப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழிமூலமாகும்.

2. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.

07. 7.1 **மாவட்ட மக்கள் தொகை விகிதாசாரத்தின் அடிப்படையில் தெரிவு செய்தல் :-**

சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதானது பிரதிநிதித்துவ அடிப்படையில் மேற்கொள்ளப்படும். வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குச் சொந்தமான ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்தினதும் மக்கள் தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப, அந்த ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திற்குமாக ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு ஒதுக்கப்படும். ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்காகப் போட்டியிடுவதற்கு, அந்த மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகைமை உடையவர்களாவர்.

(அ) ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு மேலே குறிப்பிடப்பட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை, அந்த மாவட்டத்திற்காக விண்ணப்பித்த தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளினால் நிரப்ப முடியாத சந்தர்ப்பங்களில், அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை அதற்கு அருகிலுள்ள மாவட்டத்திற்கு வழங்கப்படும்.

குறிப்பு :

மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட போதிலும், சேவைத் தேவைப்பாட்டிற்கு அமைவாக நியமனம் பெறுபவர்களை வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் ஒரு சேவைப் பணிமனையில் பணியமர்த்த முடியும்.

7.2 **ஒரு மாவட்டத்திற்கு உரித்தானவர்களாக ஆவதற்குரிய தகைமைகள்**:- ஒரு மாவட்டத்தின் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்பதாயின், விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய இறுதித் திகதிக்கு முன்னரான ஐந்து (05) வருடங்களுக்குள், அந்த மாவட்டத்தினுள் குறைந்தது தொடர்ச்சியாக மூன்று (03) வருடங்கள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

7.3 விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிட்டவாறு தாம் சார்ந்த மாவட்டத்தை உறுதிப்படுத்துவதற்காக, கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட DS 04 வதிவிடச் சான்றிதழ் கோரப்படும் சந்தர்ப்பத்தில் அதனைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

குறிப்பு:

1. எந்தவொரு விண்ணப்பதாரியும் ஒரு மாவட்டத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்களுக்காகப் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். தனது விருப்பத்திற்குரிய மாவட்டம் எதுவென ஒருமுறை குறிப்பிட்ட பின்னர், அதனை மாற்றியமைக்க முடியாது.

08. **பரீட்சை நடைமுறை :**

8.1 இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் தமக்குரிய ஒரு மொழிமூலத்தைத் தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அதே மொழிமூலத்திலேயே விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கப்படும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

இப்பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

	வினாத் தாள்	*நேரம்*	*புள்ளி*
(01)	மொழித் தேர்ச்சி	02 ½ மணி	100
(02)	நுண்ணறிவு	01 மணி	100

8.2 பாடத்திட்டம்: -

மொழித் தேர்ச்சி

இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரர்களின் கருத்து வெளிப்பாடு, கிரகித்தல், எழுத்துக்கூட்டல், மொழி மற்றும் கட்டுரை, தரப்பட்டுள்ள கடிதமொன்றை வரைவூட்டல், வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப வரைபுகள் மற்றும் அட்டவணைகளை தயாரித்தல் தரப்பட்டுள்ள பந்திகளைச் சுருக்குதல், தரப்பட்டுள்ள சில வாக்கியங்களின் கருத்துக்களை ஒரு தனி வாக்கியத்தில் எழுதுதல் மற்றும் எளிய இலக்கணப் பயன்பாடு ஆகியன பற்றிய அறிவைச் சோதிக்கும் விடயப்பரப்பு சார்ந்த வினாக்களைக் கொண்டதாக இது அமைந்திருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

நுண்ணறிவு

இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரர்களின் எண்ணியல் திறன்கள், தர்க்கரீதியான சிந்தனை, பொது அறிவு போன்றவற்றை மதிப்பிடும் வகையில் தயாரிக்கப்பட்ட விடயப்பரப்பு சார்ந்த வினாக்களைக் கொண்டதாக அமைந்திருக்கும். இது பல்தேர்வு மற்றும் குறுகிய விடை வடிவிலான 50 வினாக்களைக் கொண்டிருப்பதுடன், அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

குறிப்பு:

I. கடமைகளை மேற்கொள்வதற்காக விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும் திறன்களைப் பரிசீலிக்கும் பொருட்டு இவ்வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

II. ஒவ்வொரு எழுத்து மூல விடைத்தாள் சம்பந்தமாகவும் தெளிவற்ற கையெழுத்து மற்றும் சொற்களின் எழுத்துக்கூட்டல் பிழைகளுக்காக புள்ளிகள் குறைக்கப்படும்.

இப்பரீட்சையானது ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்தபோதிலும், நியமனம் பெறுவதற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) வீதமாவது விண்ணப்பதாரர்களினால் பெறப்படல் வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நூற்றுக்கு ஐம்பது (50%) வீதமாவது பெறப்படல் வேண்டும். போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையை நிறைவு செய்யும் வகையில், பெற்றுக்கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு வரிசை மிகக் கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

குறிப்பு - விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக தகைமைகள் காணப்படுகின்றனவா எனப் பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில், தேவையான தகைமைகள் இல்லை என்பது கண்டறியப்படின் அவர்களின் பரீட்சார்த்த தன்மை இரத்துச் செய்யப்படும்.

09. விண்ணப்பிக்கும் முறை:-

9.1 இணையவழி முறை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவமானது ஆங்கில மொழியில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். இணையவழி முறை ஊடாக விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள பொது அறிவுறுத்தல் பத்திரத்தை (Common Instructions) பதிவிறக்கம் செய்து, வாசித்து, விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது அவ்வறிவுறுத்தல்களை சரியான முறையில் பின்பற்ற வேண்டும். பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

9.2 இணையவழி ஊடாகச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தின் வன் பிரதியை பதிவிறக்கம் செய்து தங்களிடம் வைத்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படின், அந்தச் சந்தர்ப்பத்தில் பெயரொப்பம் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் வன் பிரதியை நேர்முகப்பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் காணாமல் போனால் ஏற்படும் இழப்பை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

10. **பரீட்சைக் கட்டணம்: -** பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆவதுடன், பரீட்சைக் கட்டணச் செலுத்தலானது இணையவழி முறை ஊடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணச் செலுத்தல் முறைகளின் கீழ் மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

I. ஏதேனும் ஒரு வங்கி கடன் அட்டை (Any Bank Credit Card)

II. ஏதேனும் ஒரு வங்கி பற்று அட்டை (Any Bank Debit Card)

III. இலங்கை வங்கி இணையவழி வங்கிமுறை / Flex செயலி மூலம் (Bank of Ceylon Online Banking Method / Flex App)

IV. ஏதேனும் ஓர் இலங்கை வங்கி கிளை மூலம் (Bank of Ceylon Teller Slip Payment)

குறிப்பு - மேற்படி முறைகளின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் உரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளன.

10.1 கொடுப்பனவு கிடைக்கப்பெற்றமை தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுமையான தொகையும் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது கூடுதலாகச் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கட்டணச் செலுத்தல் முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

10.2 பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது.

10.3 இப்பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, துல்லியமாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் இணையவழி மூலம் மட்டும் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்ட உடனே, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது தொடர்பில் இணையத்தள அறிவித்தல் மூலம் / விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும்.

தமது அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஒழுங்கமைப்பு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைத் துல்லியமாகக் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்ட கோரிக்கை கடிதமொன்றை, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைகள் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும்.

அனுமதி அட்டையைப் பரிசீலித்து, திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் முன்கூட்டியே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு, விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ / நேர்முகப்பரீட்சையிலோ திருத்தங்களுக்காக விடுக்கப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

10.4 இப்போட்டிப் பரீட்சையின் மூலம் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 3% மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் தகைமை பெறும் மாற்றுத்திறனாளி விண்ணப்பதாரர்களுள் அதிக புள்ளிகளைப் பெற்ற மட்டத்திலான 3% விகிதாசாரத்தினர் மாத்திரமே திறமை வரிசைக்கிரமத்திற்கு அமைவாக நியமனங்களை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படுவர். இதற்காகத் தகைமை பெறுவதற்கு, பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) வீதமாவது விண்ணப்பதாரர்களினால் பெறப்படல் வேண்டும் என்பதுடன், பரீட்சையின் மொத்தப் புள்ளிகளில் குறைந்தது நூற்றுக்கு ஐம்பது வீதமாவது (50%) பெறப்படல் வேண்டும். பொது நிர்வாக சுற்றறிக்கை 27/88 இன் விதிகளுக்கு அமைவாக, மாற்றுத்திறனாளி நிலைமை தமது கடமைகளுக்குத் தடையாக அமையாத மாற்றுத்திறனாளிகளிடமிருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

குறிப்பு - இணையவழி முறை ஊடாக விண்ணப்பிக்கும் போது, தாம் மாற்றுத்திறனாளி நிபந்தனைகளின் கீழ் விண்ணப்பிக்கின்றார் என்பதைக் குறிப்பிடல் வேண்டும் என்பதுடன் இணையவழி விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட நகலுடன், தொடர்புடைய மருத்துவச் சான்றிதழ்களின் நகல்களையும் பரீட்சைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளி அல்லாத ஒரு நபர் தவறான முறையில் தாம் மாற்றுத்திறனாளி எனக் குறிப்பிடக் கூடாது.

11. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

11.1 பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை தங்களிடம் வைத்திருப்பது கட்டாயமாகும்.

11.2 பரீட்சார்த்தி ஒருவர் தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தமக்குரிய பரீட்சை மண்டபத்திற்கு, தமது கையொப்பம் சான்றளிக்கப்பட்ட

அனுமதி அட்டையை முதன்முறையாக அந்த மண்டபத்தில் தோற்றும் நாளில் அங்குள்ள பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்தப்படுவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அவ்விதிமுறைகளை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் (ஆண்/பெண்) ஆளாக நேரிடும்.

குறிப்பு:- போட்டிப் பரீட்சையொன்றிற்குத் தோற்றுவதற்காக அனுமதி அட்டையைப் பெற்றுக்கொண்டமையானது, விண்ணப்பதாரர் இப்பதவிக்கான நியமனத்தைப் பெற்றுக் கொள்வதற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கானதோர் அங்கீகாரமாகக் கருதப்பட மாட்டாது.

12. பரீட்சை நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள்: -

நகரம்	**நகர இலக்கம்**
குருநாகல்	01
குளியாப்பிட்டிய	02
மஹவ	03
சிலாபம்	04
புத்தளம்	05

குறிப்பு. -

1. பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பிக்கப்பட்ட நகரம் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்திற்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிடின், இரண்டாவது விருப்பாகக் குறிப்பிடப்பட்ட நகரத்திற்கு அவர்கள் மாற்றப்படுவர் என்பதுடன், அந்த இரண்டாவது நகரத்திற்கும் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில், அதற்கு அருகிலுள்ளதொரு நகரத்திற்கு வழிப்படுத்தப்படுவர். எவ்வகையிலேனும் அப்போதும் ஒரு பரீட்சை மத்திய நிலையத்தை நிறுவுவதற்குப் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து, அருகிலுள்ள வேறொரு பரீட்சை மத்திய நிலையத்திற்கு அவர்கள் வழிப்படுத்தப்படுவர்.

2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கான நியமனக் கடிதங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் முதலெழுத்துக்களுடனான பெயருக்கு மாத்திரமே வழங்கப்படும் என்பதால், இணையவழி மூலம் விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரியைப் பின்பற்றி பெயர் துல்லியமாக உள்ளிடப்படல் வேண்டும். நியமனங்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பெயரில் திருத்தங்களை மேற்கொள்வதற்கோ அல்லது ஏதேனும் பகுதிகளைச் சேர்ப்பதற்கோ/நீக்குவதற்கோ அனுமதிக்கப்பட மாட்டாது.

13. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்** : -

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் மாத்திரமே செல்லுபடியாகும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;

II. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ;

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும், பரீட்சார்த்திகள் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையிலும், மின்னணுத் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையிலும் முகத்தையும் இரு காதுகளையும் மூடாதவாறு பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். இதற்கு இணங்காத விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்படக் கூடாது. மேலும், பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்த கணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாதவாறு இருத்தல் வேண்டும்.

14. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும். யாதேனுமொரு அரசாங்க நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரி தனது கையொப்பத்தை

நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அலுவலர் மூலமும், அவ்வாறல்லாத விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை பிரிவின் கிராம உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நோட்டரி அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் ஒருவர் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலத்திற்குப் பொறுப்பான அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத்தக்க தகுதியைக் கொண்டுள்ள ஒருவர் மூலமும் சான்றொப்பமிட்டுக்கொள்ள வேண்டும்.

15. **போலித் தகவல்களுக்கான தண்டனைகள்: -**

விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது மிகவும் அவதானமாக துல்லியமான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். இப்பரீட்சையின் விதிகளுக்கமைய ஏதேனும் ஒரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் எனக் கண்டறியப்படின் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்நேரத்திலும் அவரது (ஆண்/பெண்) பரீட்சார்த்த தன்மை இரத்துச் செய்யப்படலாம்.

16. **பரீட்சைப் பெறுபேறு :**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எழுத்துப் பரீட்சையின் மூலம் தகைமை பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணம் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு" விற்கு வழங்கப்படும். அதன்பின்னர், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும் அல்லது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.results.exam.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

17. பரீட்சை நடாத்தப்படுவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட்டவர்களாவர். அவ்விதிமுறைகளை மீறும் பட்சத்தில், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் (ஆண்/பெண்) உட்பட நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

இப்பரீட்சையை நடாத்துதல், நியமனங்களை வழங்குதல் மற்றும் ஏனைய அனைத்து விடயங்கள் மற்றும் இவ்வறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பிலான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களுக்கே உரியதாகும்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலின் மொழிப் பாடங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கமற்றதன்மை காணப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவித்தலே சரியானது எனக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

என்.எம்.ஜே. பிரனாந்து,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை
ஆணைக்குழு.